**நாணயச் சபை**

**இலங்கை மத்திய வங்கி**

**2020 மாச்சு 31** **நிதி வியாபாரச் சட்டப் பணிப்புரைகள்** **2020இன் 02ஆம் இலக்கம்**

---

**திரவச் சொத்துக்கள் தொடர்பான பணிப்புரைகளுக்கான திருத்தங்கள்**

2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 12ஆம் பிரிவின் கீழ் விடுவிக்கப்பட்டது

நடைமுறைச் சந்தை நிலைமைகளின் மெதுவான தன்மையினை பரிசீலனையில் கொண்டு நாணயச் சபை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளினால் பேணப்படவேண்டிய திரவச் சொத்துக்கள் தொடர்பில் இத்தால் பணிப்புரைகளை விடுத்திருக்கிறது. இதற்கமைய, 2013ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (திரவச் சொத்துக்கள்) பணிப்புரையினை பின்வருவனவற்றின் மூலம் பதிலீடு செய்கிறது.

2. **தவணை வைப்புக்கள், சேமிப்பு வைப்புக்கள் மற்றும் மாற்றல் செய்யமுடியாத வைப்புச் சான்றிதழ்களுக்காக தேவைப்படுத்தப்படும் திரவச் சொத்துக்கள்**

(i) பின்வருவனவற்றில் ஆறு (6) சதவீதம்

(அ) வியாபாரம் முடிவடைகையில் அத்தகைய நாளன்று நிதிக் கம்பனியினால் பெறப்பட்ட தவணை வைப்புக்களினதும் செலுத்தப்படத்தக்க ஒன்றுசேர்ந்த வட்டியினதும் வெளிநின்ற பெறுமதியில்; அத்துடன்

(ஆ) வியாபாரம் முடிவடைகையில் அத்தகைய நாளன்று நிதிக் கம்பனியினால் வழங்கப்பட்ட மாற்றத்தகாத வைப்புச் சான்றிதழின் முகப்புப் பெறுமதி மற்றும் செலுத்தப்படத்தக்க ஒன்றுசேர்ந்த வட்டியில்; அத்துடன்

(ii) அத்தகைய நாளில் வியாபாரம் முடிவடைகையில் அத்தகைய நிதிக் கம்பனியினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சேமிப்பு வைப்புக்களினதும் செலுத்தப்படத்தக்க ஒன்றுசேர்ந்த வட்டியினதும் வெளிநின்ற பெறுமதியில் பத்து (10) சதவீதம்.

3. **கடன்பாட்டிற்கான திரவச் சொத்துக்கள்**

பணிப்புரை (2)இன் தேவைப்பாடுகளுக்குப் புறம்பாக, ஒவ்வொரு நிதிக் கம்பனியும் 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 74ஆம் பிரிவில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு, கடன்பாடுகளின் மொத்தப் பெறுமதி சொத்துக்களின் சந்தைப் பெறுமதியினை விஞ்சக்கூடாது என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு, நிதிக் கம்பனியின் மூலதன நிதியில் உள்ளடக்கப்பட்டுள்ள கடன்பாடுகள் மற்றும் கம்பனியின் ஏதேனும் சொத்துக்களினால் பிணையிடப்பட்ட கடன்பாடுகள் நீங்கலாக, எந்தவொரு நாளிலும் வியாபாரம் முடிவடைகையில் மொத்த வெளிநின்ற கடன்பாடுகள் மற்றும் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான வேறுஏதேனும் கொடுப்பனவுகளின் தொகையில் 5 சதவீதத்திற்குக் குறையாத தொகையினைப் பேண வேண்டும்.

4.1 **இலங்கை அரசதிறைசேரி உண்டியல்கள், இலங்கை அரச பிணையங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் பிணையங்களின் தேவைப்பாடு**

உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் முற்போந்த நிதியாண்டின் பன்னிரண்டு மாதங்களின் மொத்த வைப்புப் பொறுப்புக்கள் மற்றும் கடன்பாடுகள் தொடர்பில் மாதஇறுதியில் காணப்படும் சராசரியில் ஐந்து (5) சதவீதத்திற்கு சமனான தொகையினை எல்லா நேரங்களினதும் இலங்கை அரச திறைசேரி உண்டியல்கள், இலங்கை அரச பிணையங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கிப் பிணையங்கள் என்பனவற்றின் வடிவில் பேணுதல் வேண்டும். இலங்கை அரச திறைசேரி உண்டியல்கள், இலங்கை அரச பிணையங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் பிணையங்கள் என்பனவற்றைக் கொண்ட அத்தகைய உடமைகளை முதலீட்டு நிதியின் கணக்குப் பயன்பாட்டினைக் கணிப்பதற்குப் பரிசீலனையில் கொள்ளக்கூடாது.

கொவிட்-19 தொற்றினை வெற்றிகொள்வதற்கு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கு வசதியளிக்கும் பொருட்டு, இப்பணிப்புரைகள், இப்பணிப்புரையின் திகதியிலிருந்து ஆறு (6) மாத காலப்பகுதிக்கு நடைமுறையில் இருத்தல் வேண்டும்.

**பேராசிரியர். டபிள்யு. டி. லக்ஷ்மன்**
நாணயச் சபையின் தலைவரும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்